# உண்மையான ஓர் விடுதலையை ”பயங்கரவாதம்” சீரழித்துவிட்டது.

மிகவும் பிந்திய ஓர் ஆய்வறிக்கை!

# கேட்காமல் கிடைத்த பட்டம்

ஆனையிறவு இராணுவ முகாம் வீழ்ச்சியடைந்ததும் ஏறக்குறைய தமிழீழத்தை நெருங்கிவிட்டார்கள் என்று தமிழ் மக்கள் பலரும் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினார்கள். ஒட்டிசுட்டான், முல்லைத் தீவு, ஆனையிறவு இராணுவ முகாம்களின் வீழ்ச்சிகள் பிரபாகரனுக்கு பெரும் புகழை ஏற்படுத்திக் கொடுத்தது என்றால் அது மிகையல்ல.

களத்தில் நின்றவர்களைத் தவிர தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் பிரபாகரனை தேசியத் தலைவர் ஆக்கிவிட்டனர். குறிப்பாக இப்போது வன்னியில் இருப்பவர்களும், பிறநாடுகளில் அதாவது கனடா, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாகவும் குடியுரிமை பெற்று வாழும் தமிழர்களில் அதிகமானவர்களும் இந்தத் தேசியத் தலைவர் பட்டத்தை பிரபாகரன் கேட்காமலேயே வழங்கிவிட்டனர்.

## புலம் பெயர்ந்த தமிழர்களிடம் சுரண்டல்

மேற்சொல்லப்பட்ட மூன்று பெரும் தாக்குதல்களும் முடிந்ததும் பிறநாடுகளில் வாழும் (இந்தியாவைத் தவிர) தமிழர்கள் பணத்தை வாரி வழங்கினர் விடுதலைப் புலிகளுக்கு. முறையே ஒவ்வொன்றும் முடிய பிறநாடுகளில் சேகரிப்பு பாரிய அளவில் நடைபெறும். இப்படி நடைபெறும் சேகரிப்புக்கு பத்து சதவீத கமிசன் உண்டு. உதாரணத்துக்கு கனடாவில் ஓர் ”ஆனா” ஓர் பகுதியில் பணம் சேகரிப்பவராக இருந்தால் அவர் நூறு ரூபாய் சேர்த்தால் பத்துருபாய் அந்த ”ஆனா”வுக்குத் தரகுப் பணமாகப் போய்ச் சேரும். இப்படி இந்தத் தரகுப் பணத்துக்காகவே பல நூற்றுக்கணக்கானவர்கள் விடுதலை என்ற புனிதமான சொல்லைப் பயன்படுத்தி வெளிநாடுகளில் வாழும் தமிழர்களது வியர்வையைச் சுரண்டிக்குவித்தார்கள் பல ஆயிரக்கணக்கானக் கோடிகளை!

இப்படிச் சேரும் பணம் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குப் போய்ச்சேர அதற்கும் தரகு உண்டு. இந்த நடவடிக்கைகளைக் கையாள்பவர்கள் அனைவரும் பிரபாகரனது ஊரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள். எங்கெங்கு பணம் சேர்க்கப்படுகிறதோ அங்கே சுரண்டப்படும் சேமிப்பு வல்வெட்டித்துறை நபரைப் போய்ச் சேரும். இது எழுதப்படாத தமிழரது தலைவிதி!

இப்படியாகச் சேர்க்கப்பட்ட பணம் (தரகுகள் போக) ஏறக்குறைய இன்றைய அளவில் இலங்கை மதிப்பில் அறுபதினாயிரம் கோடிகள் (60,000,0000000) இதில் சில ஆயிரம் கோடிகள் வல்வெட்டித்துறை நபர்களது பெயர்களில் சொத்துக்களாகவும், வியாபார முதலீடுகளாகவும் இருக்கின்றன.

## பணத்திற்காக போர்க்களம்

ஒரு தாக்குதல் நடைபெற்றால் வெளிநாட்டில் இருக்கும் மேற் சொன்ன தரகர்கள் உடனடியாகவே தமிழர்களது வீட்டுக் கதவுகளைத் தட்டத் தொடங்கிவிடுவார்கள். வல்வெட்டித்துறை நபர்கள், கடத்தல் செய்வதை விட இது போன்ற தரகுத் தொழில் மிகவும் சிறப்பானது என்று கண்டனர். இதனால் ஒரு தாக்குதல் முடிந்ததும் அடுத்த தாக்குதல் எப்போது என்று மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டனர். ஆதலால் மேற்படி வருவாயைப் பெருக்குவதற்காகவே தாக்குதல் என்ற நிலைக்கு

பிரபாகரன் வந்தார். எத்தனை போராளிகள் ஒரு களத்தில் இறக்கிறார்கள் என்பது ஓர் பிரச்சனையே இல்லை. எவ்வளவு பணம் சேர்ந்தது என்பதுதான் ஓர் போர்க்களத்தின் நோக்கமாக இருந்தது. சில வேளை எதிர்பார்த்ததற்கும் குறைவாகச் சேர்ந்தால் மக்கள் பயன்படுத்தக் கூச்சப்படும் வார்த்தைகளைப் பயன்படுத்தி வெளிநாட்டுத் தரகர்களுக்கு பேசுவார்கள். உடனே சம்பந்தப்பட்ட தரகர்கள் அந்த வெளிநாட்டுத் தமிழர்களது வீட்டுக் கதவுகளை ஓங்கித் தட்டுவார்கள். இவையே நேற்றுவரை நடந்தவை.

வெளிநாட்டில் வாழ்பவர்கள் இப்படி என்றால் உள்நாட்டில் குறிப்பாக வன்னியில் வாழும் தமிழ் மக்கள் எப்படிச் சுரண்டப்பட்டார்கள் என்றால் மிளகாய்க்கன்று பயிரிட்டவர் முதல் தலைமயிர் வெட்டப் போனவர்வரை சுரண்டப்பட்டார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

## வெற்றிக்கு வித்திட்ட கேணல் கருணா

இப்போது இன்றைய நிலைபற்றிப் பார்ப்போம், மேலே மூன்று பாரிய தாக்குதல்களில் களத்தில் நின்றவர்கள் தவிர என்று கூறப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் உண்டு. இந்த மூன்று தாக்குதல்களுக்கும் உரிமை கொண்டாட வேண்டியவர் "கேணல் கருணா" என்பது களத்தில் நின்ற அனைத்துப் போராளிகளுக்கும் நன்கு தெரியும். ஆனால் தேசியத் தலைவர் பிரபாகரனது சீரிய தலைமையில், சிறந்த வழிநடத்துதலில், சிறப்பான திட்டமிடுதலில் முல்லைத்தீவு இராணுவ முகாமைத் தாக்கி அழித்துவிட்டோம் என்று சு.ப. தமிழ்ச் செல்வன் அறிக்கை விடுவார். கழத்தில் நின்ற போராளிகளுக்கு செருப்பால் அடித்தது போன்று இருக்கும் தமிழ்ச் செல்வனின் அறிக்கை. காரணம், திட்டமிடுதல், தலைமைதாங்குதல், வழி நடத்துதல் அனைத்துமே கேணல் கருணா செய்திருக்க தமிழ்ச் செல்வன் போன்றோர் பிரபாகரன் என்று யாருடனும் கலந்தாலோசிக்காது துதி பாடிவிட்டார் பிரபாகரனுக்கு. இவைதான் நடந்த மூன்று பெரும் சமர்களிலும் நிகழ்ந்தவை.

## பொட்டம்மானின் சதியை முறியடித்த கருணா அம்மான்

ஆனையிறவுத் தாக்குதல் முடிந்ததும் போராளிகள் மத்தியில் கேணல் கருணா அம்மானின் மதிப்பு பல மடங்கு உயர்ந்தது. பொட்டு இதனை பிரபாகரனுக்கு உரிய முறையில் தெளிவு படுத்தினார். உடனே அடுத்த சமருக்குத் தயார்படுத்தி கேணல் கருணா அம்மானை முன்நிலைப்படுத்தி பொட்டுவின் நபர் பின்னே செல்ல சமரில் கருணா அம்மானின் வீர மரணத்துக்கு பாதை வகுத்தனர், தேடப்படும் குற்றவாளிகளான பொட்டுவும் பிரபாகரனும். இருபது ஆண்டுகள் பல வீரமரணங்களைக் கண்டுவந்த கேணல் கருணா அப்போது பழசாகிப் போயிருந்த மேற்கண்ட இருவரது திட்டத்துக்கும் நன்றி சொல்லிவிட்டு கிழக்கு நோக்கிப் புறப்பட்டுவிட்டார். ஆயிரம் போராளிகளுடன் வடக்கிலிருந்து மட்டக்களப்புவரை கால்நடையாகவே சென்றார் கேணல் கருணா! தடுக்க முடியவில்லை அந்த இருவரால். காரணம் கேணல் கருணாவிடமிருந்த பலமும் போராளிகளிடம் கருணா அம்மானுக்கிருந்த மதிப்பும் இருவரையும் திகைக்கவைத்தது.

1987 இறுதியிலிருந்து கிழக்கின் போராளிகள் பிரபாகரனுக்கு பாதுகாப்புக் கொடுக்கவென புறப்பட்டனர். அன்று முதல் 2004 மார்ச் மாதம் வரை கிழக்கின் போராளிகள்தான் பிரபாகரனின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டிருந்தார்கள். கேணல் கருணாவின் பிரிவின் போது பிரபாகரனுக்குப் பாதுகாப்பாக இருந்தவர்கள் கிழக்கைச் சேர்ந்த மொத்தம் முன்னூறு பேர். அவர்கள் அனைவரும் சிறைவைக்கப்பட்டனர். தவிர்க்க முடியாத காரணத்தினால் கடந்த ஜனவரி மாதம் அவர்கள் அனைவரையும் கேணல் கருணாவின் இயக்கமான "தமிழீழ மக்கள் விடுதலைப்

புலிகள்" (TMVP) இயக்கத்தினரைத் தாக்கி அழிக்கும்படி கிழக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இப்படி அனுப்பி வைக்கப்பட்டவர்களில் இருபது பேர்வரைதான் பானுவுடன் இணைந்து செயற்படுகின்றனர். ஏனையோர் தங்கள் வீடுகளை நோக்கி ஒதுங்கிக்கொண்டனர்.

## பிரபாவை அதிரவைத்த கருணாவின் நகர்வுகள்

கேணல் கருணா அம்மானின் பிரிவு ஆரம்பத்தில் பிரபாகரனைப் பொறுத்தவரை மிகவும் சாதாரணமாக இருந்தாலும் இப்போது அவருக்கு மிரட்சியை ஏற்படுத்தியுள்ளது. 2002 ஒப்பந்தத்தில் சில அனுகூலங்கள் இருந்தன. அதில் முக்கியமானது போக்குவரத்து. இலங்கை அரசும் (ரணில் விக்கிரமசிங்கா) கண்மூடித்தனமாக வடக்கிலிருந்து கிழக்கு செல்ல, வன்னியிலிருந்து வெளிநாடு செல்ல கொழும்பு விமானநிலையத்துக்கு சென்றுவர உலங்கு வான் ஊர்திகளும் பாதுகாப்பும் வழங்கவேண்டும் என்ற விதியை ஏற்றுக் கொண்டதால் எத்தனை பேரானாலும் அவர்களை ஆகாய மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் அழைத்துச் செல்லவேண்டியது விதியாகிவிட்டது இலங்கை இராணுவத்துக்கு. இந்த விதியை கடந்த 2004 பெரிய வெள்ளியன்று தாக்குதலுக்கு பிரபாகரன் பயன்படுத்தினார்.

பெரிய வெள்ளியன்று தாக்குதல் ஆரம்பமானதும் கிழக்கின் நன்மை கருதி கேணல் கருணா யுத்தம் வேண்டாம் என்று அறிவித்து போராளிகளை தத்தமது வீடுகளுக்கு அனுப்பி வைத்தார். இந்தச் செயலானது பிரபாகரனுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகக் கருதப்பட்டது. பாலசிங்கமும் "இதனை ஓர் சிறிய பிரச்சனை என்றும் தலைவர் சுலபமாகத் தீர்த்துவிட்டார்" என்றும் அறிவித்தார். இன்னும் சிலரோ தேசியத் தலைவருக்கு முன்னால் யாரும் நிலைகொள்ள முடியாது என்று தாமாகவே பிரசாரம் செய்தனர்.

ஆனால் நாட்கள் போகப் போக கேணல் கருணா அம்மானின் நகர்வுகள் பிரபாகரனை நிலத்தடிச் சுரங்கங்களை நாடவைத்துள்ளது. யாரைப்பார்த்தாலும் இவர் கேணல் கருணாவின் ஆளாக இருப்பாரோ என்ற சந்தேகம் பிரபாகரனைத் தொற்றிக்கொண்டது. இதனால் தனது பாதுகாப்புக் கென்று இருந்த கிழக்கின் போராளிகளை அனுப்பிவிட்டு புதிதாக தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவென்று □ற்றி ஐம்பது போராளிகளைத் தேர்வுசெய்தார். இந்த 150 போராளிகளும் தங்கள் இயக்கத்தைச் சார்ந்த எந்த ஒரு போராளியுடனும் கதைக்கக் கூடாது. பிரபாகரனைச் சுற்றி காவல் காப்பது மட்டுமே இவர்களது பணி.

இப்படியாகத் தேர்வு செய்யப்பட்டவர்களில் 1977ம் ஆண்டுக்குப் பின்னர் மலையகத்திலிருந்து அகதிகளாக வந்து வவுனியா, ஒட்டிசுட்டான், கல்மடு, முருகண்டி, மற்றும் தர்மபுரம் போன்ற பகுதிகளில் குடியேறிய இந்திய வம்சாவழி இளைஞர்கள் 95 பேர் இடம்பெற்றுள்ளனர். இதற்கான காரணம் மிகவும் இரகசியமானது என்று பொட்டுவும் பிரபாகரனும் கணித்துள்ளனர்.

## வடக்கையும் கிழக்கையும் இணைத்த TIVM

கேணல் கருணா அம்மான் தனியாக வுஆரீ என்று புதிய கட்சியை ஆரம்பித்து உடனடியாகவே நுனேடுகு உடன் இணைந்து குடை அமைப்பான "தமிழீழ ஐக்கிய விடுதலை முன்னணி (TIVM)" யைத் தோற்றுவித்தார். ஈ.என்.டி.எல்.எப் தலைவரான ராஜன் ஞானசேகரன் வன்னிப் பகுதியான கிளிநொச்சியைச் சேர்ந்தவர். கிழக்கின் கருணாவும் வன்னியின் ராஜனும் இணைந்துள்ளதால் வன்னியில் இருக்கும் இளைஞர்கள் பிரதேச உணர்வில் ராஜனை ஏற்றுக்கொண்டால்

www.tamilarangam.net


இந்தியாவில் இந்திராகாந்திக்கு அவரது பாதுகாவலர்களால் ஏற்பட்டது போன்று பிரபாகரனுக்கும் ஏற்படலாம் என்று பொட்டு கண்டறிந்து பிரபாகரனுக்கு எடுத்துரைக்க மிரண்டுவிட்டார் பிரபாகரன். இப்போது வன்னி இளைஞர்களும் சந்தேகத்துக்கு ஆளாயினர். இதன் விளைவுதான் பொறுக்கி எடுத்த 150 பேரும், அதில் 95 பேர் மலையகத்து இளைஞர்களுமாவர்.

## பரபாகரனின் அரசியல் தெளிவின்மை

பிரபாகரன் இப்போது பாதுகாப்பாக இருப்பதுதான் அவரது முதற் கடமையாக ஆக்கப்பட்டுள்ளது. கிழக்கைச் சேர்ந்த எவர் வன்னிப்பகுதிக்கு வந்தாலும் அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவது மட்டுமன்று அவர்களது மொழியில் போட்டுத் தள்ளிவிடுகின்றனர்.

பிரபாகரன் தனிநாடு என்ற கொள்கையைக் கைவிட்டுவிட்டார். இடைக்கால தன்னாட்சி நிர்வாகத்தை எப்படியாவது கையிலெடுத்துவிட வேண்டும் என்ற முயற்சியிலும் பலன் கிடைக்கவில்லை என்றதும், இப்போது சுனாமிப் பேரழிவு என்ற அனுதாபத்தைப் பயன்படுத்தி பெரும் தொகையான பணத்தை நாடி செயலில் இறங்கியுள்ளார்.

யுத்தத்தை விட பணத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை ஒன்று பிரபாகரனிடத்தில் நீண்ட காலமாகவே இருந்துவருகிறது. அரசியலில் தெளிவின்மையால் அவருக்கு பணம் பெரும் ஆயுதமாகவே தோற்றமளிக்கிறது.

பணத்தைப் பயன்படுத்தி கருணா அம்மானின் சில முக்கிய தலைவர்களைக் கொலை செய்தது தனது கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகவே அவர் கருதுகிறார். எனவேதான் சுனாமிப் பேரழிவில் இரக்கம் கொண்ட நாடுகளின் நிதியுதவிகளைக் கணக்கிட்டு வடக்குக் கிழக்குக்கான நிதி அனைத்தும் தங்களிடத்தில் வந்தடைய வேண்டுமென்று தமிழ்ச்செல்வன் தலைமையில் செவிமடுக்கும் நாடுகளுக்குச் சென்றுள்ளனர் சில முக்கிய வன்னியில் நிலை கொண்டுள்ள புலிகள்.

## பொட்டுவுடன் இணைந்த காஸ்ரோ

இப்படியான முன்னெடுப்புகள் ஒருபுறமிருக்க, இந்தியாவின் தேடப்படும் குற்றவாளிகள் பட்டியலில் இருக்கும் பிரபாகரனும் பொட்டுவும் தங்கள் மீது நேரடியான நடவடிக்கையில் இந்தியா இறங்கி விடுமோ என்ற அச்சத்தில் இந்த இருவருமே ஒருவர் மீது ஒருவர் சந்தேகம் கொள்ளும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது. பொட்டுவுடன் இணைந்து இப்போது மிகவும் நம்பிக்கையாக காய்களை நகர்த்தும் காஸ்ரோ கடந்த ஆண்டுவரை வெளிநாடுகளில் சுரண்டி எடுத்த பணத்தை தனியாகவே கையாண்டு வந்தார். பணத்தின் இரகசியம் பிரபாகரனை விட இவருக்குத்தான் வெளிச்சம். இந்த காஸ்ரோவின் கைகளில் பணம் மறைந்துள்ளதால் பொட்டு தனியாகவும் பிரபாகரன் தனியாகவும் போட்டி போட்டு காஸ்ரோவைக் கவனிக்கின்றனர். ஆனால் காஸ்ரோவின் சிந்தனையில் பிரபாகரனை விட பொட்டு நம்பிக்கைக்குரியவர் என்பது தெளிவான முடிவாகவுள்ளது. பிரபாகரன் காரியம் முடிந்ததும் போட்டுத்தள்ளி விடுவார் என்ற வரலாற்றுப் பாடத்தை பொட்டு தெளிவு படுத்தியுள்ளார் காஸ்ரோவுக்கு. எனவே, காஸ்ரோ உயிரைப் பாதுகாத்துக்கொள்ள பொட்டுவுடன் நட்பை உறுதிப்படுத்தி கொண்டுவிட்டார்.

www.tamilarangam.net


# இந்தியாவின் தலையீட்டை தடுக்க தமிழகத்தின் உதிரிக்கட்சிகள்

பொட்டுவும் பிரபாகரனும் இணைந்து பல தமிழ்த் தலைவர்களையும் தங்களது இயக்கத்துக்குள்ளேயே மதிப்பு மிக்க தலைவர்களையும் படு பயங்கரமாகக் கொலை செய்துள்ளனர். அப்படிக் கொலை செய்யும் போது பல பொய்யான இட்டுக்கட்டிய கதைகளை உள்ளேயும் வெளியுலகுக்கும் பரப்பி கொலைகளை நியாயப்படுத்தியுள்ளனர். இப்படியான சதிச் செயல்களை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தி இவற்றுக்கெல்லாம் காரணம் பிரபாகரன்தான் என்று பொட்டுவும், இல்லை பொட்டன்தான் காரணம் என்று பிரபாகரனும் ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுத்து முந்திக் கொண்டால் கொன்றவர் தியாகியாகவும், கொலை செய்யப்பட்டவர் துரோகியாகவும் மாறிவிடுவர். இன்னும் ஓர் ஆண்டுக்குள் இந்தத் தியாகியையும் துரோகியையும் தமிழர்கள் காணலாம்.

இதில் இரண்டு பேருமே இந்தியாவிடம் ஏதாவது ஓர் வழியில் மன்னிப்புக் கேட்டாவது உயிரைக் காத்துக் கொள்ளலாமா என்ற முயற்சியில் தனித்தனியாக இறங்கியுள்ளனர். தங்களது முயற்சிக்கு பலன் கிடைக்காமல் இந்தியா இவர்களைத் தண்டிக்க நினைத்தால் அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக தமிழகத்தில் உதிரிக் கட்சிகளாக இருப்பவர்களைப் பயன்படுத்த ஏற்கனவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் வை.கோ என்று பெயரை மாற்றிக் கொண்ட வை. கோபால்சாமி முக்கியமானவர். இரண்டாவது இடத்தில் இருப்பவர் பழ. நெடுமாறன், மூன்றாமிடத்தில் இருப்பவர் தொல். திருமாவளவன், நான்காம் இடத்தில் இருப்பவர் டொக்டர். ராமதாஸ். இந்த நான்கு பேரிலும் மூவர் இப்போதே கூட்டு வைத்துவிட்டனர். தமிழ்மொழிக் காப்பாளர்களாக திருச்சியில் கூடி அறிவித்தனர். வை.கோ மட்டும் தனியாகச் செயல்படுகிறார். இதற்கான காரணம் வை.கோ தெலுங்கர் என்பதேயாகும்.

தமிழ் மொழியை முன்னிலைப் படுத்தும் இராமதாஸ் குழுவினரிடத்தில் தெலுங்கருக்கு என்னவேலை இருக்கிறது என்று வைகோ தானாகவே இவர்களை விட்டு விலகிநிற்கிறார். இருந்தாலும் அடுத்து வரும் தேர்தல்களில் தன்னைத் தமிழனாக தமிழகத்துக்குக் காட்டிக் கொள்ள வை.கோ பிடித்து வைத்திருப்பது புலியின் பின் பக்கத்தை.

## வை.கோ வின் இரண்டு கண்கள்

மேற் சொன்ன மூன்று தலைவர்களையும் விட ஈழத்தமிழர் வாழ்வில் மிகவும் அக்கறை கொண்டவர் தானே என்று அடிக்கடி அடித்துக் கூறுவார் வைகோ. இந்தக் கூற்றுக்குப் பின்னால் தமிழகத்தில் வருங்கால முதல்வர் என்ற கனவு வைகோவிடம் வெளிப்படையாகவே தெரிகிறது. முன்பு மாத்தையாவையும் பிரபாகரனையும் தனது இரண்டு கண்கள் என்று வசனம் பேசியவர் வைகோ. இதில் ஒரு கண்ணை இன்னொரு கண் சுட்டு அழித்துவிட்டது. அதனால் பிரபாகரனையும் பொட்டுவையும் தனது புதிய இரண்டு கண்கள் என்று இனிமேல் சொல்லமாட்டார் வைகோ. ஆனால் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு தியாகியாக மாறினால் அவரை வைகோ ஆதரிப்பார்.

கடந்த டிசம்பர் மாதத்தில் டெல்லிக்கு சென்ற இலங்கை ஜனாதிபதி ஏற்படுத்த இருந்த இராணுவ ஒப்பந்தத்ததை தானே தடுத்து நிறுத்தியதாக அண்மையில் வைகோ வாரப் பத்திரிகை ஒன்றில் பெருமைபடக் கூறியிருந்தார். இதில் ஓரளவு உண்மையிருக்கிறது. ஏனெனில் டெல்லி அரசில் கருணாநிதியின் தலைமையிலான தமிழகத்தின் கூட்டணிக் கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. வைகோவும் கருணாநிதி கூட்டணியில் இருக்கிறார். கோயம்பத்தூ ர், சிவகாசி, கோவில்பட்டி போன்ற பகுதிகளில் இருக்கும் தெலுங்கு நாயுடு இனத்தின் தொழிற்சாலைகளுக்கான

கோட்டாக்களை டெல்லியிலிருந்து பெற்றுக் கொடுப்பவர் வைகோதான். இதனை மிகவும் இரகசியமாகச் செய்து விடுகிறார். எனவே இது போன்ற தரகு வேலைகளுக்கு வைகோ சரியான நபர்தான். ஆதலால் தனியாகச் சென்று மன்மோகன் சிங்கைச் சந்தித்து எடுத்துக்கூறி நிறுத்தியிருக்க வாய்ப்புண்டு. கூட்டணியில் இப்போது குழப்பம் எதற்கு என்று மன்மோகன்சிங்கும் நாகரீகமாக நடந்திருக்கலாம் ஆனால் இது தற்காலிகமானது என்பதில் சந்தேகமில்லை. இருந்தும் தமிழகத்தின் இந்தத் தலைவர்களை நூறுவீதம் நம்ப முடியாது. பதவிகளுக்காக யாருடனும் கூட்டுச் சேர்ந்து காலை வாரிவிடுவார்கள் என்பது பிரபாகரனும், பொட்டுவும் தெளிவாகக் கண்டறிந்து வைத்துள்ளனர்.

## பிரபாகரன் கண்டெடுத்த மறைவிடம்

ஆகவேதான், ஆப்ரிக்கா கண்டத்தில் உள்ள ஒரு நாட்டை தான் பாதுகாப்பாகத் தங்கக் கூடிய பகுதியாக பிரபாகரன் ஏற்கனவே தெரிவுசெய்து வைத்துள்ளார். சில வேளை இலங்கை, இந்தியா, வு.கே.கு ஆகிய மூன்றும் சேர்ந்து தாக்கினால் தப்பிச் சென்று மறைந்து வாழ்வதற்கான ஏற்பாடு இதுவென்று இரகசியத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இப்போதைக்கு வன்னிக் காடு மட்டும்தான் அவருக்குப் பாதுகாப்பான இடம். பொட்டு மற்றும் காஸ்ரோ போன்றோரது கைகள் வலுப்பெற்றால் பிரபாகரன் மறைந்து பாதுகாப்பாக வாழ்வதற்கு ஆசியா, அமெரிக்கா, ஆவுஸ்ரேலியா ஆகிய கண்டங்களில் உள்ள எந்த நாட்டிலும் இடம் கிடையாது.

K..பத்மநாபன் மறைந்து வாழும் தாய்லாந்திலும் முன்பிருந்த பாதுகாப்புக் கிடையாது. காரணம் K.P யுடன் முரண்பாடு ஏற்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. கே.பி.யின் வேலைகளை பழகி பொறுப்பு எடுக்கவென இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே பிரதீப் என்பவர் நியமனமாகிவிட்டார். ஆனால் கே.பி. முக்கியமான தொடர்புகள் மற்றும் பணம் வைக்கப்பட்டுள்ள இடங்கள் என்று எதனையும் இந்தப் புதிய நபருக்கு இதுவரை தெரிவிக்கவில்லை.

பிரதீப்புக்கு முன்னர் ஐயா என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் கே.பி.யையே விழுங்கிவிடக்கூடிய மோசடிக்காரராக மாறிவிட்டார் என்று அவரை நீக்கிவிட்டார் பிரபாகரன். ஐயாவும் சில கோடிகளுடன் அங்கிருந்து இடம் பெயர்ந்துவிட்டார்.

கே.பி.யின் வாழ்க்கை மிகவும் உச்சத்தில் இருந்தது. இப்போதும் இருக்கிறது. சிவில் உடை பாதுபாவலர்கள் ஐந்து பேரை கே.பி. தனியாக நியமித்து, ஒரு நபருக்கு மாதம் 2500 அமெரிக்க டொலர்கள் சம்பளம் கொடுத்துவருகிறார். இந்தச் செலவு கூட பிரபாகரனிடத்திலிருந்து தப்பிப்பதற்காக தமிழ் மக்களிடமிருந்து சுரண்டப்பட்ட பணத்திலிருந்து செலவு செய்யப்படுகிறது. பிரபாகரனுக்கும் இது நன்கு தெரியும், இருந்தும் எதுவும் செய்யமுடியாது. ஏனெனில் கே.பி.யிடம் பல ஆயிரம் கோடி ரூபாய்கள் தேங்கியுள்ளன. இரண்டு ஆண்டுகளுக்கு முன் நியமிக்கப்பட்ட நபரைக் கூட சும்மா உங்களுக்குத் துணைக்கு அனுப்பிவைக்கிறேன். ஏதாவது எடுபிடி வேலைக்குப் பயன் படுத்திக்கொள்ளுங்கள் என்று மிகவும் பணிவுடன்தான் நியமிக்கப்பட்டார். எனவே தூர கிழக்கு ஆசிய நாடுகளில் கே.பி.யின் செல்வாக்கு அதிகமாக இருப்பதால் ஆப்ரிக்காதான் ஏற்ற நாடு என்று பிரபாகரனுக்கு ஆலோசனை கூறப்பட்டு அதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்றுள்ளன. இவரது நபர்கள் முன்னரே தென்னாபிரிக்காவில் பல இரகசிய இடங்களை ஏற்பாடு செய்துள்ளனர். ஆனால் பிரபாகரன் தங்குவதற்கு ஓர் வறிய நாட்டை தெரிவு செய்து வைத்துள்ளனர். ஏனெனில் ஆப்ரிக்காவில் உள்ள நாடுகளில்தான் சில ஆயிரம் டொலர்களில் ஒரு நகரையே விலைக்கு வாங்கலாம். குறைந்த கூலியில் எத்தனை நபர்களையும் வேலைக்கு அமர்த்தலாம். மற்றபடி ஐரோப்பிய நாடுகளில் எங்கு சென்றாலும் இவருக்குத் தஞ்சம் கொடுக்கும் நாட்டுக்கு ஏனைய நாடுகளால் தொல்லைகள் ஏற்படும் என்ற அறிவுறுத்தல் கிடைத்ததால் ஐரோப்பிய தஞ்சம் கைவிடப்பட்டது.

www.tamilarangam.net


## கே.பி. யின் வலையில் சிக்கிய பிரபாகரன்

இப்படியாக ஆப்ரிக்கா கண்டம் சென்றால் உணவு ஓர் பெரும் பிரச்சனையாகிவிடும், ஏனெனில் மனைவி மதிவதனியும் குழந்தைகளும் லண்டன் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். எனவே அவர்கள் புறப்படுவதற்கு முன்னதாகவே உணவைக் கவனிக்கவென கடந்த 2002ல் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டதும் யாருக்கும் தெரியாமல் ஐந்து நபர்களை தாய்லாந்திற்கு அனுப்பி அங்கே சமயற்கலை (catering) கற்பிக்கப்பட்டது. ஆறு மாதங்களில் திரும்பி வந்த ஐவரும் முறைவைத்து சுவையான சாப்பாடு செய்து கொடுத்து வருகின்றனர். எனவே ஆப்ரிக்கா ஏற்பாடு இன்று நேற்றுத் தோன்றியதல்ல. பிரபாகரனது உணவில் கிழமையில் இரண்டு நாட்கள் கடல் ஆமைக் கறி கண்டிப்பாக இருக்கவேண்டும். அதிலும் அந்தக் கறி இப்போது தாய்லாந்து முறைப்படிதான் சமைத்துப் பரிமாறப்படுகிறது. சாப்பாடு விசயத்தில் பிரபாகரன் மிகவும் கண்டிப்பானவர், அதே சமயம் மிகுந்த பிரியமும் கொண்டவர். இந்த தாய்லாந்து சமையற்படிப்பு கே.பி. செய்துகொடுத்த ஏற்பாடு. (சந்கேப்படுவதற்கு முன்னதாக.)

கே.பி இதற்கு முன்னர் ஓர் தந்திரம் செய்தார். அதாவது வன்னிச் சமர் ஆரம்பித்ததும் பிரபாகரனுக்கான உணவும் உணவுப் பொருட்களும் கிழமைக்கு ஒருதடவை சிறப்புக் கப்பல் ஒன்றில் முல்லைத்தீவு வந்து சேரும். அங்கிருந்து வந்த உணவைச் சுவைத்த பின்னர்தான் தாய்லாந்துக்கே ஐந்து பேரை அனுப்பி அந்தக் கலையைக் கற்றுவந்தால் கப்பல்ச் செலவைக் குறைக்கலாம் என்று செலவைக் குறைக்கும் உபாயம் கண்டு பிடிக்கப்பட்டது. இப்படி ஓர் உபாயம் கண்டு பிடிக்கப்படாது விட்டால் இன்றும் உணவு தாய்லாந்திலிருந்துதான் வந்து கொண்டிருக்கும். இது பிரபாகரனின் ஓர் அறிவு பூர்வமான சிந்தனை. இப்போ ஆப்ரிக்கா தஞ்சத்துக்கு பேருதவியாகியும் விட்டது. கே.பி. பிரபாகரனுக்குத் தாய்லாந்து உணவை அங்கிருந்து தொடர்ந்து அனுப்பி வந்ததற்குக் காரணம் தனது மிக உயர்ந்த ஆடம்பரத்தை பிரபாகரனுக்குப் போட்டுக்கொடுத்தால், “ஏன் நீங்கள் என்ன தாய்லாந்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட உணவைத்தானே உண்டு ருசித்தீர்கள், இரண்டு ஆண்டுகள் இப்படி அனுப்பிவைக்கப்பட்டதற்கு எத்தனை கோடி செலவு செய்யப்பட்டது” என்று கேட்டால், பிரபாகரன் வாய் மூடி விடுவார். இப்படி தனது ஆடம்பரத்தில் பிரபாகரனும் சிக்கிவிட்டார் என்று கே.பி. நின்மதியுடன் இருந்தார். சாப்பாட்டுப் பிரியரான பிரபாகரன் கே.பி.யின் வலையில் ஆமை போல் சிக்கிக் கொண்டார்.

இவற்றில் கொடூரம் என்னவென்றால் வன்னிச் சமர் நடைபெறும் போது போராளிகள் வெறும் கஞ்சி மட்டும்தான் குடித்துக் கொண்டு போரிட்டார்கள். பிரபாகரனுக்கோ தாய்லாந்து உணவு. இது ஏதோ இட்டுக்கட்டப்பட்ட கதை கிடையாது. நேரடியாகக் கண்டு மனம் நொந்து, இதுதான் எம் இனத்தின் தலை எழுத்து என பகுத்தறிந்தவர்கள் மௌனித்து விட்டனர். அவர் இருந்ததுதான் வன்னி. வாழ்ந்தது புருனே சுல்தானுக்கு ஒப்பானது.

## பிரபாகரனின் மனைவி மதிவதனிக்குக் கிடைத்த பரிசு

கே.பி மதிவதனிக்கு இயந்திரத்தால் வடிவமைக்கப்பட்ட பரிசாக அனுப்பிவைக்கப்பட்ட தங்க நகைகளின் மதிப்புஇலங்கைப்பணத்தில்சுமார் 150கோடிகளைத்தாண்டும்.இந்தநகைகள்ஒருதடவை அனுப்பிவைக்கப்பட்டதல்ல. பேச்சுவார்த்தை என்று ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிவரும் போது தாய்லாந்திலிருந்து சுங்கச் சோதனை எதுவுமின்றி கொழும்பு விமானநிலையம் வழியாக அனுப்பி வைக்கப்பட்டவையும் அடங்கும். இப்படிப் பரிசாக வந்த நகைகள் பாதி மதிவதனியின் உறவினர்களுக்கும், பாதி பிரபாகரனின் உறவினர்களுக்கும் பரிசுப் பொருளாக உருமாறியது என்றால் , தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாக வியர்வையை வாரி வழங்க கடத்தல்காரர்களும் கொலைகாரர்களும் இதனைத் தவிர வேறென்ன செய்வார்கள் என்றார் விபரம் தெரிந்தவர்

www.tamilarangam.net


## பிரபாவை பாதாளத்தில் தள்ளிய பாலசிங்கம்

இப்போது கே.பி. பற்றி பிரபாகரன் வெளியில் யாரிடத்திலும் குறை கூற முடியாது. ஒரே வழி தூக்கத்தில் வைத்து தலையில் போட்டுவிடுவது, அல்லது தந்திரமாக அவரைக் கழற்றி விடுவது. அதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்தான் பிரதீப்!

இப்போது முக்கியமான பிரச்சனைக்கு வருவோம். பிரபாகரனுக்கு ஏன் இந்த நிலை? ஒட்டுமொத்தக் காரணங்களும் படுகொலைகள்தான்! இயக்கத்துக்கு உள்ளுக்கும் கொலை, வெளியிலும் கொலை. □ற இயக்கத் தலைவர்களும் கொலை, அவர்களது தொண்டர்களும் கொலை, எதிரியான சிங்களத் தலைவரும் கொலை, அவர்களது ஆதரவு சிங்கள மக்களும் கொலை, உதவிக்கு வந்த இந்திய இராணுவமும் கொலை, அந்த நாட்டின் தலைவரும் கொலை, இப்படியாக பிரபாகரனின் மொத்தத் தகுதியும் கொலைகள் மட்டும்தான் என்பது உலக நாடுகள் கண்டறிந்த உண்மை.

இவரை வைத்து, அல்லது இவரைத் தலைவராகக் கொண்டு ஓர் நிரந்தரத்தீர்வை ஏற்படுத்த எந்த நாடும் விரும்பாது என்பது பிரபாகரனுக்கு நன்கு தெரியும். பிரச்சனைகளைப் பேசித் தீர்ப்பதற்கும் பிரபாகரனிடத்தில் ஏற்ற நபர்கள் இல்லை. பாலசிங்கத்தை மிகவும் நம்பி இருந்தார். பாலசிங்கமோ உடல் நலனைக் காரணம் காட்டி பாதுகாப்பான இடத்துக்குச் சென்று தங்கிக்கொண்டார். பல தலைவர்களது கொலைகளுக்குத் தூ ண்டுதலாக இருந்தவர் பாலசிங்கம். குறிப்பாக அமிர்தலிங்கத்தைக் கூறலாம். எண்பதுகளில் பிரபாகரனிடத்து ஒதுங்கியதற்கு முன்னரே அமிர்தலிங்கத்தை பாலசிங்கத்துக்குப் பிடிக்காது. உமா மகேஸ்வரனையும் பிரபாகரனையும் பிரித்து விட்டவரும் பாலசிங்கம்தான். ஏனெனில் உமா மகேஸ்வரனிடத்து ஆங்கில அறிவு இருந்தது. ஒரு உறைக்குள் இரண்டு வாள்கள் எப்படி? எனவேதான் ஊர்மிளா பிரச்சினையை ஊதிப் பெரிதாக்கி உமாவைக் கொலை செய்ய ஏவி விடப்பட்டார் பிரபாகரன்.

## பிரபாவின் ஆங்கில அறிவும் பாலசிங்கத்தின் கனவும்

பிரபாகரன் தனது கதைக்கு எடுபடுகிறார் என்றதும் நிரந்தரமாகவே தத்துவ வித்தகராகத் தங்கி விட்டார் பாலசிங்கம். அமிர்தலிங்கத்துடன் ஒப்பிட்டால் அவரது அறிவுடன் பாலசிங்கம் நான்கில் ஒரு பங்கு கூடத் தேறமாட்டார். பிரபாகரன் மூலமாக நாடு கிடைத்தால் ஜனாதிபதி பதவி அல்லது பிரதம மந்திரி பதவி தனக்குத்தான் வந்து சேரும் என்பது பாலசிங்கத்தின் கனவாக இருந்தது. அமிர்தலிங்கம் உயிருடன் இருந்தால் அவருடன்தான் உலக நாட்டவர் பேசுவர் அவரைத்தான் முன் நிலைப்படுத்துவார்கள். எனவே தீர்த்துக் கட்டக்கூடிய வகையில் பிரபாகரனுக்கு தத்துவங்கள் சொன்னார் பாலசிங்கம். பிரேமதாசாவின் துணையுடன் அமிர்தலிங்கம் கொல்லப்பட்டார். பாலசிங்கம் பிரபாகரனுடன் இணைவதற்கு முன்னர் அமிர்தலிங்கத்திடம் பல உதவிகள் பெற்றுள்ளார் பிரபாகரன்.

இப்படிப் பல கொலைகளையும் செய்ய பிரபாகரன் தூண்டப்பட்டார். கொலைகளை பிரபாகரனும் பொட்டுவும் இணைந்து திட்டங்கள் வகுத்து நிறைவேற்றினார்கள். இப்போ பாலசிங்கத்தை அழைப்பதற்கு பிரபாகரன் தாழ்ந்த குரலில் கதைக்க வேண்டியுள்ளது. ஏனெனில் முறையாக ஆங்கிலத்தில் பேச தமிழீழத்தில் எந்த அறிஞரும், தலைவரும் இல்லை. அனைவரையும் கொன்று அழித்தாகிவிட்டது. இனிமேல் எதுவென்றாலும் என்னிடம்தான் வரவேண்டும் என்று நல்ல மது மயக்கத்தில் பாலசிங்கம் சிலரிடம் உளறிவைத்துள்ளார். பாலசிங்கம் சரியான ஓர் ஆலோசகராகவும் பிரபாகரன் ஓர் சரியான விடுதலையை விரும்பிய தலைவராகவும் இருந்திருந்தால் இன்று தனிநாடு மலர்ந்திருக்கும்! இதனை ஏன் தமிழ் மக்கள் சிந்தித்து அறியத் தயங்குகின்றனர் என்பது பதில் தெரியாத

www.tamilarangam.net


கேள்வியாகத்தான் இருந்துவருகிறது.

## வாழ்வை தொலைத்த தமிழர்கள்

இவர்களிடத்து அப்படி என்னதான் இருக்கிறது? 1. பணம் 2. ஆயுதம் 3. கொலையாளிகள் 4. பிரசார சாதனங்கள் 5. தங்களுக்கு மட்டுமே என்ற பதவிப் பேராசை 6. இரக்கமின்மை 7. சுயநலம் 8. கொலை மட்டுமே விடுதலை அல்லது பதவியைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை.

இவர்களிடத்து இல்லாதவை எவை? 1. அன்பு 2. கல்வி அறிவு 3. அரசில் தலைமை 4. மனித நேயம் 5. பகுத்தறிவு 6. ஒற்றுமை 7. விட்டுக்கொடுப்பு 8. பரந்த மனப்பான்மை 9. இனப்பற்று 10. அரசியல் அறிவு.

ஓர் இனத்தின் விடுதலைக்கு இவை அனைத்தும் முக்கியமானவை. மேலே சொன்ன எட்டும் கொடிய சர்வாதிகாரிக்குத் தேவையானவை. அடுத்ததாகச் சொல்லப்பட்ட பத்தும் ஓர் இனத்தின் விடுதலைக்கு அவசியமானவை! இந்தப் பத்தும் பிரபாகரனால் நிராகரிக்கப்பட்டவை! இந்தப் பத்துத் தேவைகளையும் பிரபாகரனிடத்து அண்டவிடாமல் தடுத்த பங்கு பாலசிங்கத்துக்கு உண்டு.

இன்று பாலசிங்கம் ஓரமாக ஓய்வெடுக்கிறார். பிரபாகரன் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் மறைவதற்கு இடம் தேடுகிறார். தமிழர்களோ வாழ்வைத் தொலைத்து, வலுவிழந்து உதவி நாடி நிற்கின்றனர்.

அதிலும் சுனாமி நிவாரண நிதி வந்து சேரப்போகிறது என்று தெற்கை நோக்கி காத்திருக்கின்றனர். சு.ப. தமிழ்ச் செல்வன் கொண்டுவருவார் என்று வன்னி மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

அமைதிஒப்பந்தம்ஏற்பட்டதுபிரச்சனையைப்பேசித்தீர்ப்பதற்கே.கொள்கைஇல்லாதபோராட்டம்என்றுஇதனைத்தான் சொல்வது. எதற்கோ ஆரம்பித்து சுனாமி நிவாரணத்தில் தமிழரது வாழ்வு தங்கி விட்டது. விட்ட இடத்திலிருந்து தொடர முடியவில்லை. பணத்தையும் கருவிகளையும் தவிர அனைத்தையும் தொலைத்துவிட்டார் பிரபாகரன்.

## தமிழினத்தின் தீர்வு

தமிழினத்துக்கு ஓர் தீர்வு ஏற்படவேண்டுமென்றால் அது கடந்த ஆண்டு உருவான தமிழீழ ஐக்கிய விடுதலை முன்னணியால்தான் சாத்தியம் என்பது இலங்கை அரசியலை உன்னிப்பாகக் கவனித்துவரும் ஆய்வாளர்களது கணிப்பாக இருக்கிறது. இரண்டு உறுதியான தலைவர்கள் இணைந்துள்ளனர். செயற்பாடுகளில் முன்னேற்றம் காணப்படுகிறது. பிற நாடுகளும் சொந்த இனமும் அங்கீகரிக்கும் தகுதியுடையவர்கள் என்பது பலரதும் கணிப்பாகும்

பிரபாகரன் செய்ய வேண்டியது என்னவென்று தெரியாமல் வன்னிக் காட்டுக் குழிகளில் பதுங்கியுள்ளார். அவரது கட்டுப்பாட்டிலும், யாழ் பகுதிகளிலும் தெருவில் நடக்கும் வாகன விபத்துக்களைக் கூட மக்களைப் போர்க்களத்தில் இறக்கிவிடும் மாபெரும் அநீதிகளாகக் காண்பித்து தங்கள் இயக்கத்துக்கு சிறுவர்களை இணைக்கின்றனர்.

கல்வித் தகுதி எதுவும் தேவையில்லை ஆண் பெண் இருபாலாரும் ஒன்பதுவயதைத் தொட்டிருந்தால் போதும். ஓர் ஏழு வயதுச் சிறுவன் தோற்றத்தில் பத்துவயதை ஒத்திருந்தால் அச்சிறுவன் போராளியாக்கப் படுவான். ஒன்பதுவயதுச் சிறுவர்கள் என்ற கொள்கை வறிய ஈழத்தமிழ் மக்களுக்கே தவிர பிரபாகரனுக்கு அல்ல (பிரபாகரனின் மகன் 12 வயதில் 25 வயதைத் தாண்டிய தோற்றமுடையவர் நிறை ஏறக்குறைய 80 kg.)

## குழப்பங்களுக்கு மத்தியில் பிரபாகரன்

கருணா அம்மான் தனித்துவந்ததும் பிரபாகரனது பலத்தில் அறுபதுவீதம் குறைந்துவிட்டது. இதனை ஈடுசெய்ய இன்னும் எட்டாண்டுகள் ஆகலாம் என்பது பிரபாகரனது கணிப்பு. அதுவரை அவர் உயிர் வாழவேண்டும். உள்ளே ஏற்பட்டிருக்கும் குழப்பங்களைத் திசைத் திருப்ப ஒரே வழி போரைத்துவக்குவதுதான். போரைத் துவங்கினால் தோல்வி உறுதி. தெரு விபத்துக்களை உரிமைப் பிரச்சினையாக்கினாலும் அவை நீண்டநாள் நீடிப்பதில்லை. புதிதாக இணைக்கப்பட்டிருக்கும் நான்காயிரம் சிறுவர்களை நம்பி உடனடி யுத்தத்தில் இறங்க முடியாது. இப்போது சுனாமிதான் கைகொடுக்கிறது. இதுவும் நீண்டநாள் நினைவில் நிற்கக் கூடிய யுத்தத்துக்கான தூண்டு கோலல்ல. அப்படியாயின் என்னதான் செய்யலாம்? யாரிடமாவது ஒப்படைத்துவிட்டு ஆபிரிக்காவில் சிலகாலம் மறைந்து விடலாம் என்பதுதான் பிரபாகரனின் இன்றைய முயற்சிகள்.

வரி மற்றும் சுரண்டல் மூலம் தினமும் குவியும் பணத்தைத் தனது நிலத்தடிச்சுரங்கத்தில் சேர்த்துவருகிறார். எந்த வங்கியிலும் வைப்புச் செய்ய முடியாது. சாக்குப் பைகளில் திணித்து நெல்லு மூட்டைகள் போன்று அடுக்கிவைக்கப்பட்டுள்ளது. பூச்சி கறையான் அரிக்காமலிருக்க ஒரு ரொன் பூச்சி உருண்டைகள் 2002ல் கே.பி அனுப்பியிருந்தார் தாய்லாந்திலிருந்து, அதுவும் முடிந்து விட்டது.

ஏனென்றால் 2002 மாசி மாதத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டு வன்னியூடனான யு9 பாதை திறக்கப்பட்ட முதல்நாள் வரி என்ற பெயரில் சேர்ந்த பணம் ரூபாய் 60 கோடி. இது படிப்படியாகக் குறைந்து இன்று தினமும் மூன்று கோடி ரூபாயில் நிற்கிறது. அப்படியாயின் இன்றுவரை எத்தனை கோடிகள் வன்னிப் பதுங்குகுழி, சாக்குப்பைகளுக்குள் திணிக்கப்பட்டிருக்கும் என்று கணக்கிட்டுக் கொள்ளலாம். மீண்டும் கே.பி. பூச்சி முட்டைகள் அனுப்பாததால் இப்போது வேப்பிலையும் சாம்பலும் கலந்து பூச்சிகளைத் துரத்தப் பயன்படுத்துகின்றனர். இவ்வளவு பணத்தையும் ஆப்ரிக்கா கொண்டு செல்ல தனியாக ஒரு கப்பல் வேண்டும். அங்கு சென்ற பிறகு அதன் மதிப்பு வெறும் காகித நிறைதான். இப்படிப் பலதரப்பட்ட குழப்பங்களுக்கு மத்தியில் எப்படி தமிழினத்தின் பிரச்சனைகளுக்கு இவரால் தீர்வு காண முடியும்.

வன்னி நிலத்தடி குழியை விட்டால் ஆப்ரிக்கா என்ற நிலை எதனால்? ஓர் விடுதலை இயக்கத்துக்கு இருக்க வேண்டிய முன்னர் சொல்லப்பட்ட பத்து அம்சங்களும் இவரது இயக்கத்தில் இல்லை.

## ஈழத்தமிழர்களின் கைமாறிய போராட்டம்

தமிழினத்தின் எதிர்காலம் என்னவாகும் என்று யாரும் ஆரூடம் கூறமுடியாது. பிரபாகரனால் மேலும் அழிவைத்தான் ஏற்படுத்த முடியுமே தவிர தமிழினத்தைக் கரை சேர்க்க முடியாது. தமிழ் மக்களை கரை சேர்க்க வேண்டிய பொறுப்பு பிறிதொரு இயக்கத்தின் கைகளுக்கு சென்று கொண்டிருக்கிறது. இது காலத்தின் கட்டாயம்.

பிரபாகரன் இதனை உணர மாட்டார். ஏற்றுக்கொள்ளவும் மாட்டார். பிரபாகரனுக்கு தெரிந்த தீர்வு கொலை மட்டுமே. இவர் தண்டனை பெறாத, திருந்தாத ஒரு குற்றவாளி! தேசியத் தலைவர் என்ற பட்டத்துடன் பதுங்குகுழியில் வாழ்கிறவர். ஒரு இனத்தின் நாகரீகம், வளர்ச்சி அனைத்தும் கல்வியில் தங்கியிருக்கிறது. அந்தக் கல்வியை அடியோடு இல்லாதொழித்தவர். ஒரு தலைமுறையை அழித்தும் இன்னொரு தலைமுறையை முடக்கியும் வருகிறார். பணத்தின் மீது கொள்கையை மீறி பற்றுக் கொண்டவர். இருக்கும் போராளிகள் மீது நம்பிக்கை இல்லை. இவரது தளபதிகளில் பலர் தனியாக வியாபாரம் செய்கின்றனர். இதில் முக்கியமானவர் சு.ப. தமிழ்ச்செல்வன். இவரைப் பார்த்து ஏனையோரும் ஆரம்பித்து விட்டனர். பல போராளிகளும் பணத்துடன் மறைந்து விடுகின்றனர்.

தமிழ் நாட்டில் கூட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மிகுந்த பணவசதியுடன் கனடா, ஐரோப்பா, நாடுகளுக்கு தப்பிச்செல்ல முகவர்களை அணுகிக் காத்திருக்கின்றனர். இப்படியாக ஆராய்ந்துப் பார்த்தால் வன்னியின் போராட்டம் சிறுவர்களது பலத்தில்தான் தங்கியிருக்கும்.

ஆதலால் பிரபாகரன் யுத்தத்தை ஆரம்பிக்க முடியாது! சமாதானம் பேசி தீர்வு எட்டவும் முடியாது! நோர்வே அனுசரணையாளர்கள் தரகு வேலை தவிர வேறு எதுவும் செய்ய இயலாது.

ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அழுது வடிவதால் எந்தப் பிரச்சனையும் தீரப்போவதில்லை.

அப்படியாயின் தீர்வுதான் என்ன என்ற கேள்வி எழுகிறது! இந்தக் கேள்விக்கு சரியான பதிலும் உண்டு ..... ..... ...... ...... வரும்

---

**25ந்து ஆண்டு காலம் தமிழினத்துக்காக தன்னை அர்ப்பணித்த இராணுவ ஆய்வாளர்.**

**அன்புடன் ஈழவன்.**